### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும்


# கஞ்சா, போதைப் பொருட்களை முழுமையாக ஒழித்திட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!

கள்ளக்குறிச்சி, ஆக.19-

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள பல அதிகாரிகள் போதை பொருள் விற்பனைக்கு துணையாக உள்ளனர் என மாவட்ட கழக செயலாளர், ரிஷி வந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசினார்.

கோயம்புத்தூரில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த மாணவர் அமுதன் கொலை செய்யப்பட்டதை கண்டித்து, ஒருங்கிணைந்த தி.மு.க சார்பில் கள்ளக்குறிச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. அந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர்



வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசியதாவது:

கோயம்புத்தூர் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் கஞ்சா விற்பனை அதிகமாக உள்ளது. இந்த செய்தி தெரிந்ததும் கவன ஈர்ப்பு தீர்மானத்தை சபாநாயகரிடம் அளித்து, அவசரமாக எடுத்துக்கொண்டு அவையை ஒத்தி வைக்க வேண்டும் என கடந்த வியாழக்கிழமை அன்று தெரிவித்தேன், அவையை ஒத்தி வைக்காமல் மூன்று நாட்கள் அவகாசம் கேட்டு நேற்று திங்கள்கிழமை எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர், இந்த நிலையில் அமுதனின் பெற்றோர்களை மிரட்டி சடலத்தை அனுப்பியுள்ளனர்.

த.வெ.க., ஆட்சி வந்ததும் போதைப் பொருட்கள் ஒழிக்கப்படும், சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படும். எதிலும் வெளிப்படைத்தன்மை இருக்கும் என கூறிய சோபா மாடல் முதல்வர் ஜோசப் விஜய், தற்போது எங்கே இருக்கிறார். தி.மு.க., ஆட்சியில் எது நடந்தாலும், எந்த செய்தி சட்டசபையில் தெரிவித்தாலும் அடுத்த சில நிமிடங்களில் முதல்வர் பதில் தெரிவிப்பார், ஆனால் மாணவர் அமுதன் கொலை சம்பவத்தில் இது வரை பதில் கூறவில்லை, கடந்த 100 நாட்களில் 36 மாணவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கஞ்சா, கள்ளச்சாரம் உள்ளிட்ட போதைப்பொருட்கள் பயன்பாடு தலைவிரித்தாடுகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பல அதிகாரி போதைப்பொருள் விற்பனைக்கு துணையாக உள்ளனர் என வசந்தம் க. கார்த்திகேயன் எம்எல்ஏ பேசினார்.

---

### மீண்டும் மீண்டுமா...

# பொய் பேசும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா!

## ஆதாரங்களை வெளியிட்ட ஐயன் கார்த்திகேயன்!

சட்டமன்றத்தில் நேற்று பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, 2020-க்கு முன்பு தமிழ்நாட்டில் போதை கலாச்சாரம் இல்லை என்பதை நாங்கள் மீண்டும் உறுதியாகப் பதிவு செய்கிறோம். போதை கலாச்சாரம் அதிகமாக இருந்தால் குழந்தைகள் மீது பாலியல் வன்கொடுமைகள் நடக்கும்.

2020-இல் 4,038 போக்சோ (POCSO) வழக்குகள் பதிவாகின. 2021-இல் 6,064, 2022-இல் 6,580, 2023-இல் 6,968 மற்றும் 2024-இல் 10,046 போக்சோ வழக்குகள் பதிவாகியுள்ளன.

போதைப் பொருளுக்கு எதிராக எத்தனை கூட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளில் நடந்தன?

இந்த ஆதாரங்கள் எல்லாம் தி.மு.க. ஆட்சியில் காவல்துறையால் கொடுக்கப்பட்ட அறிக்கை; இது தமிழக வெற்றிக் கழகத்தின் அறிக்கை இல்லை என்றார்.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அ.தி.மு.க. ஆட்சியில் போதைப்பொருள் நடமாட்டம் இல்லை என்று சட்டமன்றத்தில் தெரிவித்துள்ள தகவல் பொய் என கடந்த தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அரசின் "உண்மை சரிபார்ப்புக் குழு" திட்ட இயக்குநராக இருந்த ஐயன் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பதிவில், "

**தமிழ்நாட்டில் 2020க்கு முன்பாக போதை கலாச்சாரமே இல்லை என்ற பொய்யை சட்ட சபையில் வைத்து அமைச்சர் ஆதவ் பேசுகிறார். அதாவது, 2020க்கு முன்பு போதைப் பொருளை யாருமே பயன்படுத்தல போல. ஆனா Data பொய் சொல்லாது, Narcotics Drugs & Psychotropic Substance Act for the year 2017படி 2017ம் 3812 ஆக இருந்த வழக்குகள், 2020ம் ஆண்டே 5403 ஆக அதிகரித்து விட்டது என்று ஒன்றிய அரசு தரவுகளையே வழங்கி இருக்கு. https://mha.gov.in/MHA1/Par2017/pdfs/par2022-pdfs/RS-14122022/839.pdf**

**2020ல் போதைப் பொருள் தொடர்பான வழக்குகளில் தமிழ்நாடு 3ம் இடத்தில் இருந்து இருக்கு.**

**https://timesofindia.indiatimes.com/city/chennai/tamil-nadu-third-in-cases-registered-under-narcotics-act/articleshow/86414626.cms**

**2019ல் தமிழ்நாட்டில் இருந்து 28750 கிலோ கஞ்சா தொடர்பான போதைப் பொருட்கள் கைபற்றப்பட்டன. அது 2020ல் 298678 கிலோவாக அதிகரித்து இருந்தது.**

**https://sansad.in/getFile/annex/260/AU705.pdf?source=pqars**

**2017ல் மதுரையில் கஞ்சா, மதுபானம் போன்ற வஸ்துகளை படித்த இளைஞர்களுக்கு தொடர்ந்து சப்ளை செய்து, போதை பழக்கத்துக்கு அடிமையாக்கி அவர்களை குற்றச் செயல்களில் ரவுடி கும்பல்கள் ஈடுபடுத்துவதாக செய்திகள் வந்த அப்போ பேப்பர் படிக்கலையா ?**

**https://hindutamil.in/news/tamilnadu/215176-.html பவுடர் நுணுக்குவது நுட்பமான ஆட்கள் கூட இருக்கும் போது கேட்டு தெரிஞ்சுக் கோங்க சார்" என தெரிவித்துள்ளார்.**



**ஐயன் கார்த்திகேயன்**
உண்மை சரிபார்ப்புக் குழு முன்னாள் திட்ட இயக்குநர்

---

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் –

# அகஸ்தீஸ்வரம் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

கன்னியாகுமரி, ஆக. 19 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், அகஸ்தீஸ்வரம் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 17.08.2026, திங்கட்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் அகஸ்தீஸ்வரம் பேரூர் பொறுப்பாளர் டே.விஜய கங்காதரன் தலைமையில், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பாபு முன்னிலையில் அகஸ்தீஸ்வரம் சமூக நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.





ஆலோசனைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், பேரூராட்சி தலைவர் பி.அன்பரசி, மாவட்டப் பிரதிநிதி P.பிரேம் ஆனந்த், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தமிழன் D. ஜானி, பேரூர் கழக துணை செயலாளர்கள் P.அருள் ஐயப்பன், S.முருகன், பொருளாளர் சுயம்பு லிங்கம், ஒன்றிய பிரதிநிதிகள் G.அகஸ்தியலிங்கம், சுப்பிரமணியன், பாலகிருஷ்ணன், கவுன்சிலர் T. அனிதா, கழக நிர்வாகிகள் இளங்கோ, C.தேவதி, சிவ ராமகிருஷ்ணன், ராமநாடார், சீதாராமன் உட்பட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 1

அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு போதிய இடவசதி இல்லாமல் அதனை செயல்படுத்த முடியாமல் உள்ளது. எனவே அதனை செயல்படுத்துவதற்கு தேவையான இடவசதியினை ஏற்படுத்தி தர மாவட்ட பேரூராட்சி உதவி இயக்குனரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்: 2

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப்பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 4 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் பேரூர் தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.



விளாத்திகுளம் தாலுகா, இனாம் கல்லூரணி கிராமத்தில் அரியநாச்சி அம்மன், பொன் முனியசாமி கோவில் ஆடி பொங்கல் விழாவை முன்னிட்டு, மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, ஒன்றியச் செயலாளர் இமானுவேல்,கிளைச் செயலாளர் ராஜா,பாக முகவர் பெரியசாமிதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் , கிழக்கு ஒன்றியம், அய்யாபுரத்தில் திமுக கிளையை 1969ல் உருவாக்கிய மு.பி.பா என்கிற மு.பி.மணிவேந்தன் அவர்களிடம் முதல் உறுப்பினராக சேர்ந்த கடப்பாலு என்கிற பாலசுப்பிரமணியன் வயது மூப்பு காரணமாக மறைந்தார். அவரது புகைப்படம் அய்யாபுரம் மு.பி.பா. நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. நேற்று தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அப்போது தென்காசி கிழக்கு ஒன்றியச் செயலாளர் அழகுசுந்தரம், தி.மு.க. பிரமுகர் மு.பி.பா.அன்புச்செழியன் மற்றும் சோபியா அன்புச்செழியன், அய்யாபுரம் தி.மு.க. கிளைச் செயலாளர் செல்வக்குமார், அறங்காவலர் உறுப்பினர் சுந்தர்ராஜ் மற்றும் கழக உறுப்பினர்கள் பலர் உடனிருந்தனர்....



ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 வது பிறந்தநாள் முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி புகழஞ்சலி செலுத்தப் பட்டது. நிகழ்வில் கழக நிர்வாகிகள் அழகு சுந்தரம், ஜீவானந்தம் மஹ்முதா, கதிர், ஆனந்த், வாசுதேவன், அழகு தமிழ் சங்க,சூர்யா சுப்பிரமணி என்ற ஈஸ்வரன், சுப்பிரமணியன், கருப்பணன் சண்முகநாதன், மூப்பன் ஹபீபுர் ரகுமான் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

---

### சேலம் மத்திய மாவட்டம்

# வழக்கறிஞர் அ.நவமணி மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

சேலம், ஆக. 19 -

சேலம் மத்திய மாவட்டத்தின் கழக வழக்கறிஞர் அ. நவமணி (வயது 64 ) வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்து அன்னாரது உடலுக்கு மாவட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள். மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர்கள் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

---

### ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்

# ஜெ.திருவாசகம் தாயார் தேன்மொழி (எ) விஜயா மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, ஆக. 19 –

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தாயாரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் அண்ணியுமான தேன்மொழி (எ) விஜயா 17.8.2026 திங்கட்கிழமை இரவு தெற்குபள்ளம் லட்சுமி கார்டனிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு ஜெயக்குமார் என்ற கணவரும், திருவாசகம், கோவேந்தன் என்கிற இரண்டு மகன்களும் உள்ளனர்.




அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள் இளைஞரணியினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைத்து கட்சி பிரமுகர்கள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## விருத்தாசலம் எம். செல்வராஜ்

### ஆகஸ்ட் 19 (1997)



தந்தை பெரியார் தலைமையில் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.க. தொடங்கிய காலம் முதல் தொடர்ந்து தொய்வில்லாமல் கழகப் பணியாற்றியவர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். மாவட்டக் கழகச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், மூன்று முறை தணிக்கைக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழக சட்டப்பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். மாநில நிலவள வங்கி தலைவராக பணியாற்றியவர்.

மக்கள் பிரச்சினைக்காக கழகம் நடத்திய பெரும்பாலான போராட்டங்களில் பங்கேற்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

கழகச் சார்பில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'பெரியார் விருது' வழங்கி சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**